## ஒன்றான பேரருளாள ராமாநுஜ ஜீயர்

## வாழி திருநாமம்

சீராரும் செங்கமலச் சேவடிகள் வாழி
திருவரையில் சாத்திய செந்துவராடை வாழி
ஏராரும் திருமார்பில் முந்நூலும் வாழி
எதிராசர் அருளிய சீர் முக்கோலும் வாழி
தாராரும் சங்காழித் தடந்தோள்கள் வாழி
தடமலர்க் கண்ணிணை ஒளிரும் முகச்சோதி வாழி
ஆரார்வத்தழகு சிங்கர் அடி தொழுவோன் வாழி
அருள் புரியும் குறுங்கை முனி அனவரதம் வாழியே

ஆராமம் சூழ் குறுங்கை ஆள வந்தோன் வாழியே
அழகார் சித்திரை ஓணத்து அவதரித்தோன் வாழியே
பாராரும் பதின்மர் பதம் பணிந்து உய்ந்தோன் வாழியே
பாடியத்தின் உட்பொருளைப் பகர்ந்து அளிப்போன் வாழியே
சீராரும் குறுங்கை நம்பி திருவருளோன் வாழியே
செல்வ நாரணன் சேவை செய்து உகப்போன் வாழியே
ஏராரும் எதிராசர் இணை அடியோன் வாழியே
எந்தை பேரருளாள மாமுனிவன் இணை அடிகள் வாழியே

---